முருகப்பெருமான் துணை

**மகான் புலத்தீசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.03.2024**, செவ்வாய்கிழமை

1. வரலாறு படைக்க வந்தநல்
வள்ளலே வாழும் ஞானியே
அறம் கொண்டு உலகமெங்கிலும்
அற்புதம் நிகழ்த்த வந்த தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமைதனை கூறி
அவனியில் சோபகிருது சேல் திங்கள்
ஆற்றல்பட முன்னான்கோர் திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 13 ம் நாள், 26.03.2024, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
வழங்குவேன் புலத்தீசர் யானும்
சோரமிலா ஞான உலகமாக உரைப்பேன்
சுத்த சன்மார்க்க நெறி
4. நெறிதனை படைத்து அருளும்
ஞானதேசிகனார் வழிதனை
அறிவுத் தெளிவு காணும்படி
அறமாக மக்கள் ஏற்றுவர
5. வருகவே சன்மார்க்க நெறி
வையகம் எங்கிலும் வளர்ந்து
முருகப் பெருமானே தலைவனெனும்
முழுமை ஞானமும் விளங்கி
6. விளங்கியே உலக மக்களெல்லாம்
வேலவன் மேலான சோதிவழிபாடு
களங்கமறச் செய்து நன்கு
கலியினில் கடைத்தேற்றம் பெறுவர்
7. தேற்றமுற தன்வினை நீக்கி
தொடர்புள்ள மற்றவர்க்கும்
ஆற்றல் கூட்டி நல்வினையை
அதிகமாக்கும் அற்புதம் புரிவர்

8. அற்புதமான இந்தநிலை பெருக
அகிலமே ஞானவான்கள் தனை
ஏற்பு கொண்ட நல்ல தேசமாக
எல்லா சக்திகளும் நிரம்பிய வண்ணம்

9. வண்ணமுடன் ஆற்றல் கூட்டி
வருங்காலம் ஞானவான்கள் படை
அண்ணல் அரங்கன் தலைமை கண்ட
ஆன்மீக ஞான அரசியல் களமாக

10. ஆகவேச் சூழல் கனிந்து
ஆறுமுகனார் ஆசி பெற்ற
மிகையான ஞான சபையாக
மக்களை காக்கின்ற நேசிக்கின்ற

11. நேசிக்கின்ற ஞான ஆட்சி காலமாக
நிலவுலகில் நல்ல மாற்றம் கண்டு
ஆசிபலம் கூடி ஆறுமுகனார் வெளிப்பட
அகிலத்தில் மகான்கள் ஆட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—